Registered as a Newspaper

Physics: திரு. வர்ணம்
Chemistry: திரு தில்லை நாதன்
Botany: திரு. குகாதரன்
Zoology: திரு. நாக நாதன்
Pure & Applied Maths: திரு. நல்லையா
விபரங்களுக்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

88 August
விஞ்ஞானப் பிரிவு
வகுப்புக்கள்
பிரிவு II
விரைவில் ஆரம்பம்
விண்ணப்பங்கள்
ஏற்கப்படுகின்றன.
விபரங்களுக்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸ்ரீ மாசி மீ 26 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 28 (10-03-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:96

# இந்தியாவின் முக்கோண அணுகுமுறை

## ராஜீவ் -- பண்ருட்டி சந்திப்பின் பின்னர் எழுந்துள்ள நிலை

புதுடில்லி, மார்ச் 9

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா முக்கோண அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும்.

பிரதமர் ராஜீவ் காந்தியும் தமிழக மின்துறை அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனும் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து மூன்று அம்சச் செயற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துடன் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து உதயனுக்கு இது மிகவும் நம்பிக்கையாகத் தெரிய வந்துள்ளது.

* குறிப்பிட்ட கால வரையறைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும்.
* பேச்சுக்களை தொடங்குவதற்கான அடிப்படையை இந்தியா தயாரிக்கும்.
* பேச்சுக்களைத் தொடங்கும் சூழ்நிலையை உருவாக்க மீண்டும்போர் நிறுத்தம்.

மேற்கண்ட மூன்று அம்சங்களின் அடிப்படையில் தான் இந்திய அரசின் அடுத்த நடவடிக்கை அமையும் என்று புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த அடிப்படையில் தான் பிரதமர் ராஜீவ் காந்தி, தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

### போர் நிறுத்தம்

போர் நிறுத்தம் ஒன்று மீண்டும் ஏற்படும் வாய்ப்பு உருவானால் அதற்குத் தமிழ்ழ விடுதலைப் போராளிகளின் அமைப்புக்களை இணங்கச் செய்யும் பொறுப்பு பண்ருட்டி இராமச்சந்திர

(4ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனையில் வைத்து கடத்தப்பட்டவர்கள் பூஸா முகாமில்

கொழும்பு, மார்ச் 10

இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட பொறியியலாளரும் அவர் மைத்துனரும் பூஸா தடுப்பு முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக உறவினர்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

கல்முனையில் கட்டடத் திணைக்களத்தில் பொறியியலாளராகக் கடமையாற்றிய ராஜலிங்கமும் அவரின் மைத்துனர் ரவியுமே நவம்பரில் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டு இருந்தனர்.

இவர்களைத் தாங்கள் கடத்தவில்லை என்று போராளிகளின் அமைப்புக்கள் கூறியிருந்தன.

குறிப்பிட்ட இருவரும் பூஸா தடுப்பு முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக தற்போது அவர்களின் உறவினர்களுக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

முச்சந்தி முனி



எத்தினை பேர் இடிச்சு இடிச்சுச் சொன்னாலும் இவைக்கு தலையில ஏறும் எண்டு நினைக்கிறியளே..? உவைக்கு சூடு, சொரணை ஏதாவது இருந்தாவல்லோ.

கடைசியில தான் தலையில கையை வைப்பினம் இருந்து பாருங்கோ...!

### சுபநேரம்

10-3-1986

திங்கட்கிழமை

சுபநேரம்:
12.24 முதல் 1.54 வரை

ராகுகாலம்:
7.54 முதல் 9.24 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அமாவாசை விரதம்

## தொண்டமனாறில் தாக்குதல்!

கரவெட்டி, மார்ச் 10

தொண்டமனாறில் சிவராத்திரி தினமான சனிக்கிழமை இரவு இராணுவ முகாமில் இருந்தும் தொண்டமனாறு கடல் பகுதியில் இருந்தும் பீரங்கி, மோட்டோர் ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன.

இந்தத் தாக்குதல்களினால் செல்வச் சந்நிதிமுருகன் கோயிலில் விரதம் அனுஷ்டித்துக் கொண்டிருந்தவர்கள் அரைவாசியில் கோயிலை விட்டு வெளியேறினார்கள்.

## ஆஸ்பத்திரியில் கைதானவர் எங்கே?

மட்டக்களப்பு, மார்ச் 10

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் இருந்து பெப்ரவரி 14ஆம் திகதி ஆயுதப் படையினரால் கொண்டு செல்லப்பட்ட நோயாளியான கந்தையா குலசேகரம் எங்கே?

இப்படி மட்டக்களப்பு பிரஜைகள் குழுவிடம் அவரின் உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

குலசேகரம், செங்கலடி வாசி. மூளைக்காய்ச்சல் வார்டில் அனுமதிக்கப்பட்டிருந்த இவரை ஆயுதப்படையினர் விமானம் மூலம் 14.2.86 இல் கொழும்புக்கு எடுத்துச் சென்றனர்.

★ இலங்கையில்

# தமிழர் மீதான அடக்குமுறைகளை உடனே நிறுத்துக!

## மனித உரிமை ஆணைக்குழுவில் பல வெளிநாடுகள் பாய்ச்சல்

ஜெனீவா, மார்ச் 9

இலங்கையில், தமிழர்கள் மீது நடத்தப்படும் அடக்குமுறைகளையும், மனிதாபிமானமற்ற தாக்குதல்களையும் அந்த நாட்டு அரசாங்கம் உடனே நிறுத்த வேண்டும்.

இவ்வாறு ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு மாநாட்டில் பல நாடுகளும் வற்புறுத்தின.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், இராணுவத் தீர்வு காண முற்படக்கூடாது எனவும் பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, அயர்லாந்து ஆகிய நாடுகள் பலத்த கண்டனம் தெரிவித்தன.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண இந்தியா எடுத்து வரும் முயற்சிகளையும் இந்த நாடுகள் பாராட்டின.

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐ. நா. மனித உரிமை ஆணைக் குழுக் கூட்டத்தில் இலங்கையில் சிறுபான்மைத் தமிழ் மக்கள் மீது அரச படைகள் நடத்தும் தாக்குதல்கள், வகை தொகை இன்றி அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிப்பது என்பன குறித்து இந்தியப் பிரதிநிதி டாக்டர் ஜி. எஸ் தில்லான் ஏற்கனவே முறையிட்டு இருந்தது தெரிந்ததே.

தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் கூட்டத்தில் உலக நாடுகள் பல இலங்கை அரசைக் கண்டித்துப் பேசின.

### பிரிட்டன்

பிரிட்டிஷ் அரசுப் பிரதிநிதி சொன்னதாவது:

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம் பெறுகின்றன.

பேச்சுக்கள் மூலம் இலங்கை அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

இராணுவத் தீர்வு காணுவதற்கு இலங்கை அரசு முற்படக் கூடாது.

### அயர்லாந்து

அயர்லாந்து அரசுப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கனேடியத் தூதுவர் இன்று வருகிறார்

### யாழ் நகரில் பல நிகழ்ச்சிகள்

நல்லூர், மார்ச் 10

கனேடியத் தூதுவர் திரு ஜி. எம். கொலகொட்டும் தூதரக அபிவிருத்தி ஆலோசகர் திரு. ஜோன் சிப்கிளியரும் இன்று காலை ஒன்பது மணிக்கு விசேட விமான மூலம் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

பலாலி விமான நிலையத்தில் அவர்களை யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம், யாழ்-செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. த. குலசேகரம் ஆகியோர் வரவேற்பர்.

மூன்றுநாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் தூதுவர் அங்குரார்ப்பண வைபவங்களிலும், கண்காட்சிகளிலும் கலந்து கொள்வதோடு, பிரஜைகள் குழுவினர், சமயப் பெரியார்கள் ஆகியோரையும் சந்தித்துஉரையாடுவார்.

இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் அகதிகள் புனர்வாழ்வு நிதியப் பிரதிநிதிகளை

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி - டிக்ஸிற் நேற்றுக் காலை சந்திப்பு

## ஒரு மணி நேரம் நீடித்த பேச்சு

கொழும்பு, மார்ச் 10

இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற், நேற்றுக் காலை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

காலை 10 மணியளவில் ஆரம்பித்த பேச்சுக்கள் சுமார் ஒரு மணித்தியாலமாக நீடித்தன.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் வாய்மூலமான செய்தியை திரு. டிக்ஸிற், திரு. ஜெயவர்த்தனாவிடம் தெரிவித்தார் என்று அறியவருகிறது.

இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும். இலங்கையில் இடம் பெறும் வன்செயல்களில் அப்பாவிக் குடிமக்கள் கொல்லப்படுவது இந்தியாவுக்குக் கவலை அளித்துள்ளது.

இப்படி திரு. டிக்ஸிற் ஜனாதிபதியிடம் தெரிவித்தாராம்.

"இனப்பிரச்சினைக்கான பேச்சுக்களை நடத்த இலங்கை அரசு தயாராக உள்ளது. திரு பண்டாரியை இலங்கை வருமாறு விடுத்த அழைப்பு இன்னும் செல்லுபடியானது. திரு. பண்டாரியின் விஜயத்தை இலங்கை எதிர் பார்க்கிறது — இப்படி திரு. ஜெயவர்த்தனா திரு. டிக்ஸிற்றிடம் தெரிவித்

(4ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி அபகரிப்பு

திருகோணமலை, மார்ச் 10

மூதூரில் உள்ள முஸ்லிம் ஊர்காவல் படைவீரர் ஒருவரிடமிருந்து துப்பாக்கியும் தோட்டாக்களும் இனந்தெரியாத நபர்களினால் பறித்துச் செல்லப்பட்டன.

இச் சம்பவம் கடந்த வியாழன் இரவு இடம் பெற்றது.

## 119 வயது பிரமச்சாரி திருமணம்!

பிரேஸில், மார்ச் 9

பிரேஸில் நாட்டைச் சேர்ந்த நீண்ட காலப் பிரமச்சாரி ஒருவர் தனது 119 ஆவது வயதில் திருமணம் செய்து கொண்டார்.

சென்ற சனிக்கிழமை திருமணம் நடந்தது. வால்டமீரா சில்வா என்ற இந்த நபர் செல்வந்த குடும்பத்தில் பணியாளராக நீண்ட காலம் சேவை செய்தார்.

இவர் திருமணஞ் செய்த57வயது மணப்பெண் இரேசிமா லேடெரியா செல்வந்தரின் பேரப்பிள்ளையின் வீட்டில் பணிப்பெண்ணாக இருந்தவர்.

## மன்னாரில் பதற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

வெடிச் சத்தங்களாலும் துப்பாக்கி சூட்டுச் சம்பவங்களாலும் மன்னார் நகர் நேற்றிரவு பதற்றம் அடைந்தது.

மன்னார் நகரில் நேற்றிரவு சுவரொட்டிகளை ஒட்டவந்த போராளிகளை நோக்கி மன்னார் கோட்டை முகாமில் உள்ள இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அதனைத் தொடர்ந்து ரொக்கெற் லோஞ்சர்கள், கைக்குண்டு ஆகியவற்றால் போராளிகளும் முகாமை நோக்கித் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில்

## சைக்கிள் லைசென்ஸ் இல்லாதவர்களின் அடையாள அட்டை பறிமுதல்

மட்டக்களப்பு, மார்ச் 10

மட்டக்களப்பில் நடைபவனியாகச் சென்று தேடுதல் நடத்தும் சிப்பாய்கள், லைசென்ஸ் பெறாமல் சைக்கிளோடுபவர்களின் அடையாள அட்டைகளை வாங்கிக் கொண்டு போய்விடுகின்றார்களாம்.

சைக்கிள் லைசென்ஸ்களை கொண்டு போய்க் காட்டிய பின்னர்தான் அடையாள அட்டைகள் திருப்பிக் கொடுக்கப்படுகிறதாம்.

இதனால் மட்டக்களப்பு மாநகர சபை அலுவலகத்தில் சைக்கிள் லைசென்ஸ் எடுப்போர் தொகை தினமும் அதிகரித்து வருகிறது.

தாழப் பறந்த ஹெலிக்கொப்டர்

# வானில் சென்றவர்களை கலைத்துக் கலைத்துச் சூடு!

## அச்செழுவில் ஒருவர் மரணம்

பலாலி, மார்ச் 10

அச்செழு போயிட்டிப் பகுதியில் வானில் சென்று கொண்டிருந்தவர்களை தாழப் பறந்த ஹெலிக்கொப்டர் கலைத்துக் கலைத்துச் சுட்டது.

வானில் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவர் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்தது.

இத் தாக்குதலில் அச்சுவேலி வளலாய்க் கிராமத்தைச் சேர்ந்த இரத்தினசபாபதி கணேசகுமார் (வயது 23) மரணமானார்.

இச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

நேற்று முன்தினம் 10 மணியளவில் தமது வானில் ஏற்பட்ட பிழையினைத் திருத்துவதற்காக கணேசகுமாருடன் மேலும் மூவர் சென்றனர்.

அச்செழு அம்மன் கோயிலடி வெளியில் வான் சென்று கொண்டிருந்தபோது மேலே தூரத்தில் ரோந்து புரிந்து கொண்டிருந்த ஹெலிக்கொப்டர் 'வானை' நோக்கிச் சுட்டது.

வானில் சென்றவர்கள் வானை நிறுத்திவிட்டு இறங்கி ஓடினர். அப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாஸ்போர்ட் புதிய தொடர் இலக்கம்

கொழும்பு, மார்ச்10

"ஜே" தொடர் பாஸ்போர்ட் விநியோகம் தற்போது நடைபெறுகின்றது

மோசடிகளைத் தடுக்குமுகமாக 'ஜே' பாஸ்போர்ட்டில் இரகசிய அடையாளம் இடப்பட்டுள்ளது.

# சிங்களக் கட்சிகளை இணங்க வைக்க முயற்சி

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக

கொழும்பு, மார்ச் 10

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் இரண்டு பெரிய சிங்கள அரசியல் கட்சிகளுக்கும் இடையே ஒரு உடன்பாட்டை ஏற்படுத்த திரைமறைவில் முயற்சிகள் எடுக்கப்படுவதாகத் தெரிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விஷயத்தில் முட்டி மோதிக் கொண்டு நிற்கின்றன.

இந்தியாவும் இனப்பிரச்சினை விஷயமாக இலங்கை அரசின் மீது ஒரு கடுமையான போக்கை அனுட்டிக்கத் தொடங்கியிருக்கின்றது.

இந்த நிலையில் பெரிய சிங்களக் கட்சிகளான சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தமக்கிடையே நிலவும் உள்வேறுபாடுகளை, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விஷயத்தில், ஒதுக்கி வைத்து விட்டுச் செயல்பட வேண்டும் என்று சிங்களப் பிரமுகர்கள் திரைமறைவு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக கொழும்பு வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

அமைச்சர் காமினி ஜெயசூரியா கொழும்பு ஆங்கில பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில்

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேகமாக முன்னேறிவரும் இளம் நடிகர் சுரேஷ்

திரையுலகில் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இளம் நடிகர்களில் சுரேஷும் ஒருவர்.

அழகும் கம்பீரமும் கட்டுடலும் கொண்ட இளம் நடிகர் அவர்.

அவர் தனது குடும்ப வாழ்க்கை பற்றி குறிப்பிட்டுவிட்டு, பட வாழ்க்கை பற்றியும் சொல்கிறார்.

'நானும் அவிதாவும் பரபரப்பான முறையில் விவாகம் செய்துகொண்டது அனைவரும் அறிந்த விஷயம்.

இப்போது இருவீட்டாரின் ஆசிகளுடன் எங்கள் இல்வாழ்க்கை ஆனந்தமாக, அமைதியாகச் செல்கிறது.

இருவரும் திரைப்படத்துறையைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் ஒருவர் மனத்தை ஒருவர் புரிந்து கொண்டு சந்தோஷமாகவும் குதூகலமாகவும் இருக்கிறோம்.

படவுலகின்தொடர்புடன் சினிமாவில் நடிக்க வந்து 'பன்னீர் புஷ்பம்' முதல் இன்று வரை நடிப்பிலேயே மனதைச் செலுத்தி வருகிறேன். என் நடிப்பினால் அனைவரின் மனதிலும் என்றும் நிலைத்து நிற்கவே விரும்புகிறேன்,

மாறுபட்ட பாத்திரங்களில் நடித்து, என்றும் ஒரு கலைஞனாகவே வாழ்நாள் முழுவதையும் செலவிட பேராவலாய் உள்ளேன்.

ரசிகர்கள் மனதில் நிலைத்து நிற்கக்கூடிய பாத்திரத்தில் நடிக்கவே விரும்புகிறேன். அதுமாதிரியான பாத்திரங்கள் இப்போது எனக்குக் கிடைத்து வருகின்றன.

தற்சமயம் எச்.எம்.சி. புரொடக்ஷன்ஸ் 'மவுனம் கலைகிறது' படத்தில் எனக்கு முற்றிலும் வேறுபட்ட குணசித்திர வேடம். காதல், வீரம், தியாகம் முதலிய குணங்களைக் காட்டக்கூடிய விதத்தில் இரு கதாநாயகிகளுடன் நடிக்கிறேன்.

இதைவிட மற்றும் பத்துப் படங்களில் நடித்து வருகிறேன். இப்படங்களில் வித்தியாசமான பாத்திரங்கள் கிடைத்திருப்பதால், எனக்கு அவை புகழ்தரக் கூடியதாக அமைந்திருக்கின்றன' என்றார் சுரேஷ்.

தினசரி சினிமா

## பிரிட்டிஷ் மருத்துவ சங்கம் கண்டனம்

லண்டன் மார்ச்.9

உலகெங்கும் பரவலாக மக்களைச் சித்திரவதை செய்வதை பிரிட்டிஷ் மருத்துவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

மக்களை இம்சைப்படுத்துவதில் பலவந்தம் காரணமாகவும், தமது சொந்த விருப்பின் பேரிலும் மருத்துவர்களும் ஈடுபட்டு உள்ளதற்கு மறுக்க முடியாத ஆதாரங்கள் உள்ளன.

—இவ்வாறு பிரிட்டிஷ் மருத்துவ கழகம் அறிவித்து உள்ளது.

இவைபற்றி ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்குமாறு தேசிய சங்கங்களை பிரிட்டிஷ் மருத்துவ சங்கம் கோரியுள்ளது.

★ பிலிப்பீன்ஸில்—

# 13 உயர் அதிகாரிகள் வீட்டுக் காவலில்

### மார்க்கோஸுக்கு ஆதரவான முப்படைத் தளபதிகளுக்கும் இந்தக் கதி

மணிலா, மார்ச். 9

பிலிப்பீன்ஸ் முப்படைகளின் முன்னாள் தளபதிகள் உட்பட பதின்மூன்று உயர் அதிகாரிகள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர்.

நாட்டைவிட்டுத் தப்பி ஓடிய முன்னாள் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸுக்கு ஆதரவாகச் செயற்பட்ட பதின்மூன்று பேருமே இவர்கள் என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதியாக பதவியேற்றிருக்கும் திருமதி. கொரேசன் அக்கியூனோவின் பணிப்பின் பேரிலேயே இவர்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருமதி. அக்கியூனோ தமது அதிகாரத்தை வலுப்படுத்தவும், புதிய சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் வசதியாக பிலிப்பீன்ஸ் நீதிபதிகள், மேயர்கள், அரசாங்க தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் உட்பட அனைத்து அரச உயர் அதிகாரிகளை இராஜினாமாச் செய்யும்படி கேட்டிருந்தார்.

இந்த உயர் அதிகாரிகள் அனைவரும் திரு மார்க்கோஸினால் நியமிக்கப்பட்டவர்கள்.

எனினும் திருமதி. அக்கியூனோவின் கோரிக்கைக்கு இணங்கி தமது பதவிகளை இராஜினாமாச் செய்ய பல உயர் அதிகாரிகள் மறுத்து வருகிறார்கள்.

இவ்விடயம் மணிலா அரசியலில் தொடர்ந்து இழுபறி நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

## வால்ட்ஹெய்ம் நாசிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்

### உலக யூதர் காங்கிரஸ் குற்றச்சாட்டு

முன்னாள் ஐ. நா. பொதுச் செயலாளர் குர்ட்வால்ட்ஹெம் தனது பதவிக் காலத்தில் நாசி போர் தஸ்தாவேஜுக்களை அமெரிக்கா பெறுவதற்குத் தடையாய் இருந்தார்.

இவ்வாறு யூதர்கள் குற்றஞ்சுமத்தி உள்ளார்கள். வால்ட்ஹெய்ம் இரண்டு நாசி இயக்கங்களைச் சேர்ந்தவர் என்றும், போர்க்கால குற்றங்களுக்குத் தூக்கில் இடப்பட்ட ஜெர்மானிய ஜெனரல் ஒருவருக்கு உதவியாளராக இவர் இருந்தார் என்றும் உலக யூதர் காங்கிரஸ் குற்றஞ்சாட்டி உள்ளது.

ஊர்ஜிதம் செய்யப்படாத குற்றச்சாட்டுக்கள் இருந்தமையால் இக்கோவைகள் பொதுமக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்படவில்லை என்று ஐ. நா. சபை பேச்சாளர் குறிப்பிட்டார்.

சுமார் நாற்பதாயிரம் குற்றவியல் சந்தேக நபர்கள் பற்றிய விவரங்கள் இக்கோவைகளிலும் காணப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யுகோஸ்லேவிய பத்திரிகை ஒன்றும் இத்தகைய குற்றச்சாட்டைக் கூறியுள்ள போதிலும் வெளிவிவகார அமைச்சு எவ்வித அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லை.

தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள பிரதான கோவைகளின்படி வால்ட்ஹெய்ம் ஜெர்மானிய போர்ப்படையில் அதிகாரியாக இருந்ததாகவும் போர் நடவடிக்கைகளில் நாசி அதிகாரியாக செயற்பட்டதாகவும் இப்பத்திரிகை கூறியுள்ளது.

## அக்கியூனோவுடன் ஒத்துழைக்காவிடில் பேரவை கலைக்கப்படும்

மணிலா, மார்ச் 9

கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி மார்க்கோஸின் கட்டுப்பாட்டில் உள்ள பிலிப்பீன்ஸ் தேசிய பேரவை அக்கியூனோ ஆட்சியுடன் ஒத்துழைக்காவிட்டால் கலைக்கப்படும்.

இவ்வாறு புதிய ஆட்சிப் பேச்சாளர் ஒருவர் பத்திரிகையாளருக்குத் தெரிவித்து உள்ளார்.

நாட்டின் அரசியல் யாப்பின்படி, தேசிய பேரவைதான் புதிய ஜனாதிபதியைப் பிரகடனஞ் செய்யவேண்டும்— எனவும் இப்பேச்சாளர் தெரிவித்தார்.

## சாட் நாட்டில் சண்டை

லண்டன், மார்ச். 9

சாட் நாட்டில் அரசின் ஆயுதப்படைகளுக்கும் அரசு எதிர்ப்பு கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டுள்ளது

வெளி உலகில்

## தெ.பசுபிக்கில் தெரிந்தது அமெரிக்க நீர்மூழ்கிதான்

### இவ்வாறு அடித்துக் கூறுகிறது நியூஸிலாந்து சமாதானக் குழு

வெலிங்டன், மார்ச். 9

தென்பசுபிக்குத் தீவுக்கு அப்பால் கடலில் ரஷ்யக் கலத்தைப் போன்ற மாறுவேடத்தில் காணப்பட்டது அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் தான்.

இவ்வாறு நியூஸிலந்தின் முக்கியத்துவம் மிக்க சமாதானக்குழுவொன்று அடித்துக் கூறியுள்ளது

ஒட்ரினோ சமாதானக் குழுவின் தலைவரான ஓவன் வில்கிஸ் மேலும் இது தொடர்பாகக் கருத்துதெரிவித்தபோது—

அமெரிக்காவுக்கு அதிக வாய்ப்புள்ள நோக்கில் தென் பசுபிக்கில் ரஷ்யா பற்றிய அச்சம் எந்த வகையிலும் ஏற்பட முடியாது.

நியூஸிலாந்து விமானப் படைக்குச் சொந்தமான ஒறியன் ரக விமானம் இந்த நீர்மூழ்கியின் நடமாட்டத்தை இடக்குறிப்புடன் கவனித்துள்ளது.

இந்தப் பிராந்தியத்தில் தனது கலங்களின் நடமாட்டம் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டதே என்ற தர்ம சங்கடம் ஒன்று இப்பொழுது அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளதும் தெரிகிறது.

இந்த நீர்மூழ்கி விவகாரம் பற்றித் தெரிவித்த தகவல் வட்டாரத்தை நான் வெளியிடப் போவதில்லை இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள பாதுகாப்புத் தொடர்புகள் இப்பொழுது துண்டிக்கப் பட்டுள்ளன.

நியூஸிலாந்துத் துறைமுகத்தில் அணு ஆயுத அல்லது அணுசக்தி வாய்ந்த கப்பல்களை அனுமதிப்பதில்லை என்ற அந்தநாட்டின் அறிவிப்பே இதற்குக் காரணமாகும்.

பல்கலைக்கழக

## பீடாதிபதிகள் ராஜினாமா படலம்

கொழும்பு,மார்ச்10

பல்கலைக்கழக பீடாதிபதிகள் ராஜினாமாச் செய்யும் படலம் தொடர்கின்றது.

சம்பள அதிகரிப்புக் கோரி கொழும்பு பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதிகள் ராஜினாமாச் செய்தது தெரிந்ததே.

களனி பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடாதிபதிகள் மார்ச் 15 ஆம் திகதியும் —

பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதிகள் மார்ச் 28 ஆம் திகதியும் ராஜினாமாச் செய்யப்போவதாக அறிவித்து இருக்கிறார்கள்.

சம்பள உயர்வு வழங்கப்படாததற்குக் காரணம் திறைசேரி தான் என்று அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

முன்னர் மகாவலி அபிவிருத்தி வேலைகளினால் சம்பள உயர்வு வழங்கப்பட முடியாதிருந்தது.

1986இல் பாதுகாப்புச் செலவினம் காரணமாக சம்பள உயர்வு வழங்கப்பட முடியாதுள்ளது.

இப்படி திறைசேரி வட்டாரங்கள் கூறுகின்றன.

## சேமிப்பு வங்கி கிளை மந்திகைக்கு

நாகர்கோவில், மார்ச்10

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக் கிளை மந்திகையிலுள்ள புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய மாடிக் கட்டடத்திற்கு தற்காலிக இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ் வங்கிக் கிளை பருத்தித்துறைப் பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாக கடந்த ஒரு மாத காலமாக மூடப்படிட்டிருந்தது.

## இறந்தவர் யார்? சுதாவா? அல்பிரட்டா?

கிளிநொச்சி, மார்ச்.10

கடந்த திங்கட்கிழமை பரடிப்போக்குச் சந்தியில் இராணுவ துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சுதா என இராணுவம் தரப்பில்தெரிவிக்கப்படுகிறது.

உருத்திரபுரத்தைச் சேர்ந்த சுதா என்பவர் தான் இறந்தவர் எனவும் இராமநாதபுரத்தில் இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமரில் இவர் முக்கிய பங்கு வகித்தார் என்றும் இராணுவம் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இறந்தவர் கிளிநொச்சி கணேசபுரத்தைச் சேர்ந்த அல்பிரட் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தை என இறந்தவரது மனைவி திருமதி எம். அல்பிரட் தெரிவித்துள்ளார் இராணுவம் அதற்கு செவிசாய்ப்பதாகத் தெரியவில்லையாம்.

### வகுப்புகள்

தொலைக்காட்சி பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்:- 1-4-1986 பயிற்சிக் காலம் 6 மாதம் கிழமை நாட்களில் இரு தினங்கள் விண்ணப்ப முடிவு திகதி 20-3-86. கட்டணம் மாதமொன்றிற்கு ரூபா 150. மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். திரு. எஸ். குணாளன், ரெனி கோணர் சாவகச்சேரி.

## அதிபர், ஆசிரியர் பிரச்சினைகளை உடனடியாகக் கவனிக்க உத்தரவு

### சம்பளக் கொடுப்பனவு முறை சீரமைப்பு

மானிப்பாய் மார்ச்.10

'ஆசிரியர்களோ, அதிபர்களோ தங்கள் பிரச்சினைகளையிட்டுக் கல்வித் திணைக்களத்துக்கு வராதவாறு, அவர்களின் பிரச்சினைகள் உடனுக்குடன் கவனிக்கப்பட வேண்டும்'. இப்படி கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிட்டுள்ளார் புதிய யாழ்ப்பாண கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம்.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தைச்சேர்ந்த நிர்வாகத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் அடங்கிய விசேட கூட்டம் ஒன்றில் இவ்வுத்தரவை அவர் பிறப்பித்தார்.

புதிய கல்விப் பணிப்பாளராகக் கடமையேற்றுள்ள திரு. இரா. சுந்தரலிங்கம் உத்தியோகபூர்வமான முறையில் தமது நிர்வாக உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் அழைத்து அண்மையில் கூட்டம் ஒன்றை நடத்தினார்.

ஆசிரியர்களின் சம்பளம்பற்றி பின்வரும் நடைமுறைகளை செயல்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு பாடசாலை அதிபர்களுக்கும் 16-ம் திகதிக்கும் 20-ம் திகதிக்குமிடையில் அவர்களது ஆசிரியர்களுக்கான சம்பளப் பட்டியலும், காசோலையும் வழங்கப்படும்

ஒவ்வொரு மாதமும் 25-ம் திகதிக்குள் பாடசாலை அதிபர்கள் சம்பளப்பட்டியல்களைத் தத்தம் வட்டாரக்கல்வி அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

வட்டாரக் கல்வி அதிகாரிகள் சம்பளப்பட்டியல்களை ஒவ்வொரு முதலாம் திகதிக்குள்ளும் கல்வித் திணைக்களத்தில் சேர்ப்பிக்க வேண்டும். இதற்காக அவர்களுக்கு போக்குவரத்துச் செலவுகள் வழங்கப்படும்.

முதலாம் திகதியிலிருந்து 15ஆம் திகதிவரை நான்கு நிலைகளில் கல்வித்திணைக்கள ஊழியர்கள் சம்பளக் கணிப்பீட்டில் ஈடுபடுவர்.

16ம் திகதி தொடக்கம் 20ம் திகதிகளுக்கிடையில் சம்பளப் பட்டியல்களையும் காசோலைகளையும் ஒவ்வொரு வட்டாரக் கல்வி அதிகாரிகளும் சேகரித்துத் தமது காரியாலயம் கொண்டு சேர்ப்பர்.

இந்தத் தினங்களிலேயே பாடசாலை அதிபர்கள் வட்டாரக் கல்விக் காரியாலயங்களில் தமது சம்பளக் காசோலைகளையும் சம்பளப் பட்டியல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்களோ, ஆசிரியர்களோ தமக்கு ஏற்படும் எந்தப் பிரச்சினைகளையும் கடிதமூலம் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்தால் அவை உடனடியாகக் கவனிக்கப்படும். இதற்காக கல்வித் திணைக்களத்துக்கு அலையத் தேவையில்லை.

இளைப்பாறிய ஆசிரியர்களுக்கான சம்பளம் வழங்கப்படுவதிலும் உடனடியாகக் கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தியா இல்லாவிட்டாலும்

## 'ஆசிய கிண்ண' ஆட்டம் நடந்தே தீரும்

கொழும்பு, மார்ச்10

இந்தியா கலந்து கொள்ளாவிட்டாலும் ஆசிய கிண்ணத்துக்கான கிரிக்கெட்போட்டி இலங்கையில் நடந்தே தீரும்.

இப்படி கொழும்பு உயர் அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன. மார்ச் 30 இலிருந்து ஏப்ரல் 6 வரை கொழும்பு கெற்றாராம விளையாட்டரங்கில் ஆசிய கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளக் கூடாது என்று இந்திய வெளிவிவகார அமைச்சு இந்திய கிரிக்கட் அணிக்கு கடந்த வியாழன் இட்ட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, கிரிக்கெட் வட்டாரங்கள் சோர்வடைந்துள்ளன.

ஆசிய கிண்ணப் போட்டி இந்தியா இல்லாமல் நடந்தாலும் அது சோபிக்குமா என்பது அடுத்த கேள்வி.

எப்படியாயினும், ஆசிய கிண்ணப் போட்டிகள் நடக்கும் என்று இலங்கை அரசு உயர் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

மக்கள் முகம்

### சனசமூகநிலைய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்10

யாழ்ப்பாணம் ஆத்தி சூடி வீதி கலைமகள் சனசமூக நிலைய 1986 ஆம் ஆண்டுக்குரிய புதிய நிர்வாகிகள், போஷகர் தெரிவு திரு. வ. தம்பிராசா தலைமையில் நடந்தது:-

போஷகர்:- திரு. வ. தம்பிராசா, தலைவர்:- திரு.க பேரம்பலம்(ச.நீ) துணைத்தலைவர்:- திரு. நா. செல்லத்துரை,(ஆசிரியர்) செயலாளர்:-திரு. சி. நவரத்தினம், துணைச் செயலாளர்:- திரு. க. செ. தியாகராசா (ச நீ.) பொருளாளர்:-திரு நா. இராசதுரை. துணைப் பொருளாளர்:- திரு.நா. சுப்பிரமணியம். கலைத் தலைவர்:- திரு. சி. தர்மலிங்கம்.(ஆசிரியர்). விளையாட்டுத்தலைவர்:- திரு. மா. ரகுநாதன்.

ஐந்து பேர் கொண்ட நிர்வாகசபையினரும் தெரிவாகினர். திருவாளர்:- மா. சிவராசா, அ. சிவராசா, சி.யோகரத்தினம், யே. ஜெயகுமார். வ. தம்பிராசா.

### மின்சாரம் பெற முயற்சி

மானிப்பாய், மார்ச் 10

உடுவில் தெற்கு சத்தியபுரம் கிராமவாசிகள் தங்களுடைய கிராமம் இருளில் மூழ்கியிருக்கும் காரணத்தால் நிரந்தரமாக இக் கிராமத்துக்கு மின்சார வசதி செய்து தருமாறு உடுவில் அபிவிருத்திச்சபை அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரைக் கேட்டுள்ளனர்.

உடுவில் கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் ஆதரவில் இக்கிராமத்துக்கு மின்சாரம் தேடும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

### துப்பாக்கி பற்றிய புள்ளி விவரம்

கொழும்பு, மார்ச்.10

வடக்கு—கிழக்கு மாகாணங்களில் உள்ள பொலீஸ் நிலையங்களில் இருந்து காணாமற்போகும் துப்பாக்கிகள், தோட்டாக்கள் பற்றி பொலிஸ் தலைமைக் காரியாலயம் புள்ளி விவரம் சேகரிக்கத் தொடங்கி உள்ளது.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## கொள்ளையிடுவதற்கு வந்த இளைஞர்களிடம் சீன ரக ரைபிள்களாம்

திருகோணமலை, மார்ச்10

இனந் தெரியாத பத்து இளைஞர்கள் அல்லை - கந்தளாய் வீதியில் உள்ள சிங்களவர் ஒருவரின் வீடு ஒன்றில் கொள்ளை இட்டதாக கந்தளாய் பொலீஸில் முறையிடப்பட்டது.

கடந்த வெள்ளியன்று அதிகாலை இரண்டு மணி அளவில் இச்சம்பவம் நடந்தது.

கொள்ளையடித்த இளைஞர்கள் சீன ரக ரைபிள்களை வைத்திருந்ததாக பொலீஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

16,000 ரூபா பணம், 26,500 ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளை இடப்பட்டனவாம். கொள்ளைக் கோஷ்டியினரால் கொண்டு செல்லப்பட்ட இரண்டு சைக்கிள் [illegible] வில் அநாதரவான நிலையில் [illegible]ன.

## ஆலயங்களைக் காப்பாற்ற நல்லை முதல்வர் முயற்சி

### 16ஆம் திகதி விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச்10

இந்து ஆலயங்களை அழிவுகளிலிருந்து காப்பாற்ற என்ன நடவடிக்கைகளை எடுப்பது பற்றி ஆராய நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் மாநாடு ஒன்றைக் கூட்டுகின்றார்.

மாநாடு மார்ச் 16 ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இது சம்பந்தமான அறிவித்தலில் நல்லை ஆதீன முதல்வர் [illegible] தாவது:

[illegible] எமது தத்துவச் சின்னங்கள். கலாசாரத்தின் பிரதிபலிப்புக்கள் நாகரிகத்தின் எடுத்துக் காட்டுக்கள்.

இவைகள் இன்று அழிக்கப்படுகின்றன.

எமது அறிவகங்களாகிய நூல்நிலையங்கள்,பாடசாலைகள் அழிக்கப்பட்டு சிறுர்கள் கல்வி பெற முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

இந்த அழிவுகளும் இனக்கொலையின் பிரதிபலிப்புக்களே. இது பற்றி கண்மூடியிருக்கஇயலாது.

இப்படி அந்த அறிவித்தலில் நல்லை ஆதீன முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

அன்புதான் உலகஜோதி,
அன்பு தான் இன்ப ஊற்று,
அன்பு தான் உலகமகாசக்தி.

- சோக்கிரட்டீஸ்.

உதயன்

உண்மை - அச்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24805, 22078

10-03-86

த. பெ. 23

# ஈழத் தமிழ்ப் பெண்களே சபாஷ்! தொடருங்கள்!!

வடஈழத் தமிழ்ப் பெண்கள் கடந்த சனிக்கிழமை சரித்திரம் படைத்தார்கள். ஆம். சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8ஆம் திகதி அவர்கள் தனியாக ஓர் ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள்.

பெண்கள் தனித்து நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி சுமார் பத்து மைல்கள் சென்றது. ஆயிரக்கணக்கான இளம் பெண்களும் தாய்மாரும் பேரணியில் சலியாது, சளையாது கலந்துகொண்டனர்.

பெண்கள் சமத்துவத்தையும் அவர்களின் முக்கியத்துவத்தையும் உணர்த்தும் உணர்ச்சி மிக்க சுலோகங்களை நங்கையர்கள் எடுத்துச் சென்றனர்.

அவை எல்லாவற்றையும்விட அவர்கள் எடுத்துச் சென்ற அரசியல் சுலோகங்கள் தான் எமது கவனத்தை ஈர்க்கின்றன.

பண்டைக் காலத்துத் தமிழ்ப் பெண்கள் வீரம் மிக்கவர்கள். போர்க்களத்தில் தனது மகனின் நெஞ்சில் அம்பு பாய்ந்தது என்பதைக் கண்டு, ஈன்றபொழுதிலும் பெரிது உவந்தவர்கள். அந்த வீரமும், விவேகமும் நமது தாய்மாரிடம் குறையவில்லை என்பதைப் பெண்கள் பேரணியும் அவர்கள் கொண்டு சென்ற சுலோகங்களும் எடுத்துக் கூறின.

இருந்து இருந்தாற்போல், விமானத் தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களும் நடக்கும் இவ்வேளையில், பெண்கள் தனித்து ஒரு பேரணியை நடத்திய துணிவு ஒன்றே அவர்கள் வீரத்தின் அடையாளம் என்று சொல்லலாம்.

அதுவும், முதல் நாள் கொழும்பில் நடந்த பெண்கள் பேரணியைப் பொலீஸார் கலைத்தார்கள் என்று தெரிந்தும், யாழ்ப்பாணத்தில் ஊர்திகள் சகிதம் பேரணியைத் துணிந்து நடத்தியமை மெச்சத்தக்கதாகும்.

ஒருநாட்டின் முன்னேற்றம், அங்கு வாழும் மக்களின் வளம், செழிப்பு எல்லாவற்றையும் பிரதிபலிப்பவர்கள் அந்த நாட்டின் பெண்கள். அவற்றுக்கு மூலகாரணமாக இருப்பவர்களும் பெண்களே.

பெண்களிடம் வீரம் இருக்கிறது என்றால் அந்த நாட்டு மக்கள் வீரம் நிறைந்தவர்களாக இருப்பார்கள் என்று கருதலாம். அந்த வகையில் தமிழ் மக்களிடம் பரம்பரை வீரம் இன்னும் செத்துப்போகவில்லை என்று சொல்ல இடமுண்டு.

சர்வதேச மட்டத்தில் பெண்கள் இப்போது அனேகமாக ஆண்களுக்குரிய எல்லா உரிமைகளையும் அனுபவிக்கிறார்கள். ஆனால் எமது ஈழத்துத் தமிழ்ப்பெண்கள் இன்னும் அந்த அளவுக்கு உயரவில்லை; உயர்த்தப்படவில்லை. வேலைவாய்ப்பு, வேதனம், திருமணம் ஆகிய சமூகத் துறைகளில் அவர்களை நாம் இன்னும் எத்தனையோ படிகள் உயர்த்தவேண்டி உள்ளது. சீதனம் போன்ற கொடுமைகளை நீக்கவேண்டியுள்ளது. அதாவது எமது ஈழத் தமிழ்ப் பெண்கள், சமூகத் துறையில் மேம்பட இன்னும் பல உரிமைகளை வென்றெடுக்கவேண்டிய நிலையில் உள்ளனர்.

எனினும் அதற்கு முதலில் அரசியல் விடுதலைக்கு உழைக்க வேண்டிய பொறுப்பும் பெண்களுக்கு வந்திருக்கிறது. எந்தளவுக்கு எந்தளவு ஒருவன் அடக்கி ஒடுக்கப்படுகிறானோ, அந்தளவுக்கு அந்தளவு அவனது விடுதலை உணர்ச்சி வேகம் அதிகரிக்கிறது.

ஈழத்தின் தமிழ் மண்ணில் நடந்து கொண்டிருப்பதும் அதுவே. தமிழ்ப் பெண்களை ஆயுதப்படையினர் இம்சைப்படுத்துகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் வேதனைதரும் விதத்தில் நடந்துகொள்கிறார்கள்.

இவற்றை ஏனைய அட்டூழியங்களோடு சேர்த்துப் பொதுப்படையாகச் சொல்வதைவிட, தனித்துப் பிரித்துப் பெண்களே எடுத்துச் சொல்வதால் நிறையப் பலன் உண்டு.

ஈழத் தமிழ்ப் பெண்களுக்கு நடக்கும் கொடுமைகள் வெளிஉலகில் தெரியவேண்டும். அதனால் சர்வதேசப் பெண்கள் அமைப்புகள் குரல்கொடுத்து அவற்றைத் தடுக்கப் பாடுபடும் சூழ்நிலையும் உருவாகும்.

பெண்களின் இந்தப் போராட்டம் மேலும் வலுக்கவேண்டும். உலகத்தின் கவனத்தை ஈர்க்கவேண்டும்.

எந்த நாட்டிலும் விடுதலைப் போர்கள் பெண்களின் பங்களிப்பின்றி நடந்தது குறைவு. சரித்திரகாலம் தொடக்கம் இது ஊர்ஜிதமாகி வருகின்றது.

அந்த வகையில் விடுதலைக்கு உழைக்க வேண்டிய பொறுப்பு ஈழத் தமிழ்ப் பெண்களுக்கும் உண்டு. அதனை அவர்கள் உணரத் தலைப்பட்டு விட்டார்கள். அது நல்ல சகுனம்.

ஈழத் தமிழ்ப் பெண்களே சபாஷ்! தொடருங்கள். வெல்லுங்கள்.

# நிலாவெளி அகதிகள் கரவெட்டியில் தஞ்சம்

கரவெட்டி, மார்ச் 9

நிலாவெளி வாசிகள் 104 அங்கத்தவர் கொண்ட 19 அகதிக் குடும்பங்கள் கடந்த புதன்கிழமை கரவெட்டிப்பகுதியை நாடி வந்தனர்.

இவர்களை வதிரி சதிர்காம கோவிலடி விநாயகர் கிராம அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்றுள்ளது.

இந்த அகதிகள் தங்குவதற்கு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அண்மையில் உள்ள ஒரு கட்டிடத்தில் முகாம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு இ. ஐயாத்துரை இவர்களைச் சந்தித்து உரையாடினார். நிவாரண உதவி வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

அகதிகளுக்கு உதவ முன்வந்த கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

நிலாவெளிப் பகுதியில் மேலும் பலர் அகதிகளாக்கப்படுவதாக இங்கு வந்து சேர்ந்த அகதிகளில் பலர் குறிப்பிட்டுள்ளனர்.

## "காங்கேசன் கல்வி மலர்" நாளை மறுதினம் வெளியீடு

பலாலி, மார்ச் 10

காங்கேசன்துறைக் கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் வரலாறு, வளர்ச்சி என்பவற்றை அடக்கிய 'காங்கேசன் கல்வி மலர்' என்ற நூல் நாளை மறுதினம் புதன்கிழமை வெளியிடப்படவிருக்கிறது.

காங்கேசன்துறைக் கல்வி வட்டாரத்திலுள்ள அதிபர்கள் சங்கம் இதற்கான முயற்சியை எடுத்திருக்கின்றது.

கல்வித்துறையின் ஆய்வு முயற்சிகளுக்கு உதவும் வகையில் பதிக்கப்பட்டுள்ள இந்நூல் யாழ்மாவட்டத்தின் முதலாவது முயற்சியாகும்.

இதைத் தொடர்ந்து 'பாலர் பாட்டு' ஒன்றினை வெளியிடும் முயற்சியினையும் மேற்படி அதிபர்கள் சங்கம் மேற்கொண்டுள்ளது.

கல்வித்துறையின் முற்போக்கான இம் முயற்சிக்குக் கால்கோளான கல்வியாளரும், வட்டாரக் கல்வி அதிகாரியுமான திரு பொ. சிவஞானசுந்தரம் தனது முழு முயற்சியினையும் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## பொய்யாமொழி



குறள்

அல்லவைதேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

பொருள்:

பிறர்க்கு நன்மையானவற்றை நாடி இனிமையுடைய சொற்களைச் சொல்லின், பாவங்கள் தேய்ந்து குறைய, அறம் வளர்ந்து பெருகும்.

# ஆங்கிலம் பயிலுங்கள்: அதற்குச் சில வழிமுறைகள்

ஆங்கிலம் உலக மொழி, மருத்துவம், தொழில்நுட்பம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் போன்றவற்றைக் கொண்ட நூல்களும் மொழியாக்கங்களும் நிரம்பப்பெற்ற அறிவுக் கருவூலமே ஆங்கிலம், எமது நாட்டில் ஆங்கிலத்திலோ மொழிபெயர்ப்பாகவோ ஒரு நூல் வெளிவருமுன், மேலை நாட்டில் பல நூற்றுக்கணக்கான நூல்கள் ஆங்கிலத்தில் பிரசுரம்பெறுவதால், அறிவுத்துறையில் நாம் எவ்வளவோ பின்தங்கியுள்ளோம் என்பது தெளிவாகும். எனவே, உலகத்தோடு ஒட்டி, ஆழ்ந்த அறிவை உடனுக்குடன் பெறுவதற்கு ஆங்கிலத்தைத் துறைபோகக் கற்பது இன்றியமையாதது.

ஆங்கிலமொழி கற்பதில், கேட்டல், வாசித்தல், பேசுதல், எழுதுதல் என நான்கு படிகள் உள.

தொட்டிற் பருவத்திலேயே நாம் தாய்மொழியைக் கேட்டு, அடிப்படை அறிவைப் பெறுவதுபோன்றே, மூத்த தலைமுறையினரையொட்டி, முதற்படியாக ஆங்கிலத்தைக் கேட்கும் வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும். இதனை, "கற்றிலனாயினும் கேட்க" என்று வள்ளுவர் வலியுறுத்தினர். வானொலி, தொலைக்காட்சி,மேடைப் பேச்சு போன்ற சாதனங்கள் இவ்வகையில் உதவும். இதனால், ஆங்கில உச்சரிப்பு, சொல்லாக்கம், வாக்கிய அமைப்பு ஆகியன கைவரப் பெறும்.

இரண்டாம் படியான வாசித்தலின் அவசியத்தை "வாசித்தல் ஒருவனை முழு மனிதனாக்கும்" என்று பேக்கன் (Bacon) என்ற ஆங்கிலப் புலவன் எடுத்துக் காட்டினன். வாசித்தலின் தொடக்கமாக, இலகுவான கதை நூல்கள் செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை மாணவர் வாசிக்கவேண்டும். இதனால், எழுத்துக் கூட்டல், சொல்லாக்கம், மொழிமரபு, வாக்கிய அமைப்பு ஆகியவற்றைச் கற்றுத் தேர்ந்து, ஆங்கிலத்தைத் தானாகவே பேசவும், எழுதவும் வழி பிறக்கும்.

மூன்றாவது படி பேசுவது. "செந்தமிழும் நாப்பழக்கம்" என்ற ஆன்றோர் வாக்கு ஆங்கிலத்திற்கும் பொருந்தும். எமது மூத்தோர் போன்றே, நன்குகேட்டு, வாசித்தால், ஆங்கிலத்தைச் சரளமாகப் பேசலாம். தப்பில்லாமல் பேசினால், தவறாக எழுதுவதைத் தவிர்க்கலாம்.

எழுதுவது, மொழிப் பயிற்சியின் கடைசிக் கட்டம். முறையாகக்கேட்டு, பேசி, வாசிக்கும் பயிற்சிகளில் போதிய பயிற்சி பெறாமல் எழுத முயன்றால். தெளிவற்ற பொதுவான பிழைகளும் மல்கும்.

> கட்டுரையாளர் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தொழில் நுட்ப நிறுவனத்தில் ஆற்றிய உரையின் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.

தமிழ் மொழியொடு ஒப்பிடின். ஆங்கில இலக்கணம் கற்பது சுலபம். ஆங்கில இலக்கணவிதிகள் ஒரு வரம்புக்குட்பட்டு. நெறிமுறை தவறாது தர்க்க ரீதியாக அமைந்தன. ஆங்கில மொழி இலக்கணம் இலகுவாக அமைவதால், இம்மொழியைச் சுலபமாகக் கற்றுவிடலாம் என்று எண்ணிவிடக் கூடாது ஆங்கிலம் கற்பதில் பல இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. அவற்றுள் சில எடுத்துக்காட்டுகளைக் கீழே காண்க.

தமிழ்மொழி போல அன்றி, எழுத்தின் ஒலியைக்கொண்டு ஆங்கிலச் சொற்களை உச்சரிக்க முடியாது. வேறுபட்ட சொற்களிலுள்ள ஒரே எழுத்து மாறுபட்ட உச்சரிப்பைத் தருகின்றது. 'Cut' என்ற சொல்லிலுள்ள 'U', 'அ' என்ற ஓசையையும், 'Put' என்ற சொல்லிலுள்ள அதே 'U', எழுத்து 'உ' ஒலியையும் தருகின்றது. இதே போன்று, 'Give' என்ற சொல்லிலுள்ள 'இ' உச்சரிப்பையும், 'Five' என்ற சொல்லிலுள்ள அதே 'I' [illegible] யும் பெற்று பேச [illegible] தொல்லையுள் தள்ளுகிறது.

வேறுபட்ட ஒலியைத் தரும் எழுத்துக்கள் விரவிவரும் சொற்களை உச்சரிப்பது கடினம். 'Horse' என்பதை 'ஹோஸ்' (குதிரை) என்றும் 'Hose' என்பதை 'ஹோஉஸ்' (நீர் தெளிக்கும் குழாய்) என்றும் மாறுபடாது உச்சரிக்க வேண்டும். தமிழ் மொழி மூலம் கற்பவர் ga, ka, ha, sa, cha, za pa, ba, va போன்ற ஒலிகளைத் தவறாக உச்சரிப்பதால், பொருள் வேறுபட்டும் மாறுபட்டும் அமையும்.

சில சொற்களில் எழுத்துக்கள் ஓசையைப் பெறாமலே இடம் பெறுகின்றன. 'Thump' என்ற சொல்லை உச்சரிக்கும் போது, ஒலி பெறாத 'b' அமைதி பெறுகின்றது இதேபோன்று, Psycho-logy' என்ற சொல்லில் 'P' ஒலியைப் பெறுவதில்லை.

ஒரே மாதிரி எழுத்துக் கூட்டி எழுதினாலும், உச்சரிப்பு இரண்டு வகையாக அமைந்து, இரு

## க- கயிலாயநாதன்

(வட்டுக்கோட்டை மாவடி கலாநிலைய முதல்வரும், முன்னாள் அதிபரும், பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் ஆங்கில விரிவுரையாளரும்)

பொருளைத் தருவதையும் காணலாம். 'Minute' என்ற சொல்லை 'மினிற்' என்று உச்சரிப்பின், பெயர்ச் சொல்லாய் நிமிடம், என்றும்' மைனூற்' என்று உச்சரிபபின் பெயர் உரியாகி 'துல்லியமான' என்றும் பொருள் படும்.

எழுத்துக்கள் சொற்களில் இடம்பெறும் நிலையைப் பொறுத்தே வெவ்வேறு ஒலியைப் பெறுகின்றன. 'ch' எழுத்துகள் சொல்லின் முன் வரும்போது 'chord' 'க்' என்ற ஒலியையும், ஈற்றில் வரும்போது, 'preach' 'ச்' என்ற ஒலியையும், அல்லது 'Spinach' என்ற சொல்லில 'ஷ்' என்ற ஒலியையும் பெற்று வாசிப்போரையும் பேசுவோரையும் தத்தளிக்கச் செய்கின்றன.

சொற்களை எதிர்மறையாக மாற்றும்போது. சொற்பகுதிகளை (Prefixes) பயன்படுத்துதல் சிக்கலானது. un, in, dis, mis, ir போன்ற பகுதிகளை எந்தெந்தச் சொற்களோடு இணைத்து, எதிர்மறையாக்குவது பிரச்சினைக்குரியது. unjust, injustice, disconnect, misfortune, irregular போன்ற சொற்களில் வேறுபட்ட பகுதிகள் விரவிவருவதை ஊன்றி நோக்குக. இப்பிரயோகத்தை மனம்போன போக்கில் மேற்கொள்ள முடியாது ஆங்கிலமொழி மரபை அறிந்து, ஏற்ற பகுதியையே எடுத்தாள வேண்டும்.

வேற்றுமை உருபுக்களை 'Prepositions' தவறான இடத்தில் பயன்படுத்தின், அவைவாக்கியப் பொருளையே மாற்றிவிடும். ('Velan attended on a Patient' 'கண்காணி' என்றும், Velan attend-ed to a business' 'ஈடுபடு' என்றும ,வேற்றுமை உருபு இல்லாது 'Velan attended a wedding' 'சமுகமாயிரு' என்றும் பொருள் வேறுபடுவதைக் காண்க. ஆங்கிலமொழியில் வேற்றுமை உருபுகளை மிக அவதானமாகப் பிரயோகிக்க வேண்டும்.

இன்றேல், இவை தவறான சுவையான கருத்தை வெளியிடும்.

ஆங்கிலத்தில் எழுத்துக் கூட்டல் சிக்கலானது. ஒரேஓசையைப் பெறும் எழுத்துக்கள் சொல்லுக்குச் சொல் வேறுபட்டு மயக்கத்தைத் தருகின்றன. 'ஷன்' என்ற ஓசை, tution (tion) division (sion) suspicion (cion) fashion (shion) என்று எழுதும்போது வேறுபடுகின்றது. 'sc' 'ce' என்ற எழுத்துக்கள், சொற்களின் ஈற்றில் வரும்போது advise, practise என்ற வினையையும், advice Practice என்ற பெயரையும் சுட்டும்.

ஆங்கிலத்திலுள்ள வேறுபட்ட வாக்கிய அமைப்புக்களை மாணவர் விளங்கிக்கொள்ள வேண்டும் தமிழ் வாக்கியம், எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற ஒழுங்கிலேயே அமையும். ஆனால், ஆங்கில வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற ஒழுங்கே சரியானது. தமிழில் வாக்கியம் எவ்வளவு நீளமாக அமைந்தாலும், பல வினையெச்சங்களைக் கொண்ட ஒரேயொரு வினைமுற்றே இடம்பெறும். ஆனால் ஆங்கிலத்தில் ஒரேயொரு வினைமுற்றைக் கொண்ட அமைப்பு 'Simple Sentence' தனிவாக்கியம் என்று பெயர் பெறும். ஒரே வினை முற்றைக் கொண்ட 'Simple Sentences' and, but போன்ற 'Conjunctions' கூட்டுச் சொற்களால் இணையும் போது, 'Compound Sentence' கூட்டுவாக்கியம் எனப் பெயர்பெறும். 'Raman went to town and bought a book' என்ற 'compound' வாக்கியத்தில் 'went', 'bought' என்றஇரண்டு வினைமுற்றுகள்கொண்ட இரு தனிவாக்கியங்கள் 'and' என்ற 'Conjunction' கூட்டுறவுச் சொல்லால் இணைந்து, 'இராமன் பட்டணம் போய் ஒரு புத்தகம் வாங்கினான்' என்று பொருள்படும். 'who, whom, whose, when' போன்ற 'Relatives' தொடுசொல் கொண்டு தனிவாக்கியங்கள் தொடுக்கப்பெற்றால், அது 'Complex sentence' என்று பெயர் பெறும். 'My uncle, who was ill' could not attend office last month' என்பது 'சுகவீனமுற்ற எனது மாமன் சென்ற மாதம் அலுவலகத்திற்குப் போகமுடியவில்லை' என்று பொருள்பட்டு, 'who was ill' என்ற 'Clause' தொடு சொற்றொடர் கொண்டு இணைக்கப்பெற்று, 'Complex sentence' தொடர் வாக்கியம் என்ற பெயரைப் பெறும்.

தனிவாக்கியங்களை 'synthesize' இணைத்தும், simple, compound, complex' வாக்கியங்களை. 'Analyse' பங்கீகரணம் செய்தும் பயிற்சி பெற்றால், வாக்கிய அமைப்புகளை விளங்கவும் பிழையற எழுதவும் உதவும். உச்சரிப்பு, எழுத்துக்கூட்டல், சொல்வதெழுதல், சொல்லாக்கம், மரபுச் சொற்றொடர், வாக்கிய நடைமாற்றம் போன்ற பயிற்சிகளில் போதிய தேர்ச்சி பெறவேண்டும். 'Spoken English' 'பேச்சு ஆங்கிலம்' என்ற பெயரில், மிகக் குறுகிய கால எல்லையுள் ஆங்கிலத்தை வருமான நோக்குடன் கற்பித்தல்', மாணவரைப் பணம் விரயம் செய்யத் தூண்டி, பயனில்லாத முடிவுக்கு இட்டுச் செல்லுமன்றோ!.

அறிவுக் களஞ்சியத்தின் திறவுகோலான ஆங்கிலத்தைக் கற்க அவாவுகின்ற மாணவன், சிறந்த தகுதியும் நிறைந்த அனுபவமும் கைவரப்பெற்ற ஆசிரியரிடம் புகலிடம் பெற்று, சில ஆண்டுகளேனும் பொறுமையோடு கற்று, இம்மொழியைக் கேட்டு, வாசித்து விளங்கவும், பேசவும் எழுதவும் ஆற்றல் பெற்றால், நல்லறிஞனாய் உலகக் குடிமகன் என்ற உன்னத உயர்வை எய்துவது உறுதி.

# நல்லுறவை வளர்க்கும் இந்தியாவின் முயற்சி

## முழுஏமாற்றம் என்கிறார் ஜி.கே.ரெட்டி

புதுடில்லி, மார்ச். 9

அயல்நாடுகளுடன் நல்லுறவை வளர்க்கும் இந்தியாவின் முயற்சி, இலங்கையைப் பொறுத்தமட்டில் சந்தேகத்துக்கு இடமின்றி முழு ஏமாற்றத்தையும் அதைரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பிரபல அரசியல் விமர்சகர் திரு. ஜி கே. ரெட்டி 'இந்து' நாளிதழில் மேற்கண்டவாறு எழுதியிருக்கிறார்.

பிரதமர் ராஜீவ் காந்தி பதவிக்கு வந்த பின்னர், அன்னையின் வழியைத் தொடராமல் அயல்நாடுகளுடன் நல்லுறவை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுவந்தார். அதற்குத்துணையாக வெளியுறவுச் செயலாளர் திரு ரொமேஷ் பண்டாரி செயல்பட்டார்.

இதுபற்றி திரு. ரெட்டி 'இந்து'வில் எழுதியிருப்பதாவது:

நல்லுறவை வளர்க்கும் இந்தியாவின் முயற்சி அயல்நாடுகளில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

இது புதுடில்லி அரசு வட்டாரங்களில் சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில் சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஏமாற்றமும் அதைரியமும்தான் இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது. இருந்தாலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தவிர வேறு மாற்று வழியில்லை என்ற அடிப்படையில்தான் இந்தியா தொடர்ந்து செயல்படும்.

இலங்கையுடன் நல்லுறவை வளர்க்க எடுக்கப்பட்ட முயற்சி தோல்வி கண்டது இந்தியாவுக்கு அச்சத்தை ஏற்படுத்தவில்லை—

இப்படி திரு. ரெட்டி எழுதியிருக்கின்றார்.

# இடர்ப்பாடுகளை நீக்க வல்லது ஆலய வழிபாடு

## வட்டாரக் கல்வி அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம்,மார்ச்10

பயம், மனச்சோர்வு, நெருக்கடிநிலை போன்ற இடர்ப்பாடுகளை நீக்க வல்லது ஆலய வழிபாடு தான்,

இப்படி வட்டாரக் கல்வி அதிகாரி திரு மு. சிவானந்தம் சொன்னார்.

வடலியடைப்பு ஐயனார் ஆலய பரிபாலன சபையின் இணைச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் நன்றி தெரிவித்துப் பேசுகையில் திரு. சிவானந்தம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்;

தலைவர்: செ. கணபதிப்பிள்ளை வட்டாரக் கல்வி அதிகாரி), இணைச் செயலாளர்கள்; மு, கந்தசாமி, மு. சிவானந்தம், பொருளாளர்; சி. சிவசண்முகம்பிள்ளை, உபதலைவர்: தா. சிவசுப்பிரமணியம். 11 பேரைக் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

# இணைப்புப் பற்றி நாடாளுமன்றத்தில்...

கொழும்பு, மார்ச் 10

ஏதாவது ஒருவகையான வடக்கு—கிழக்கு இணைப்பு பற்றி நாடாளுமன்றத்தில் பேசப்பட்டது.

மலையக வன்செயல் பற்றிய விவாதத்தில் மகரகம எம் பி. திரு தினேஷ் குணவர்த்தன பேசினார்.

திரு. தினேஷ் குணவர்த்தன:

வடக்கு—கிழக்கு இணைப்பை ஏதாவது ஒருவகையில் கொண்டதாக புதுடில்லியில் திட்டம் தயாரிக்கப்படுகிறது என்று 'இந்து' செய்தி கூறுகின்றது. பண்ருட்டி இராமச்சந்திரனும் இதற்கு உதவுவதாகக் கூறப்பட்டு உள்ளது.

திரு. லலித் அத்துலத் முதலி குறுக்கிட்டு:

பண்ருட்டி இராமச்சந்திரன் கூட்டணியின் சார்பாகத்தான் ஏதாவது ஒருவகையான வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றிக் கூறியிருக்கின்றார்

இலங்கை அரசின் நிலைமை அதுவல்ல''

## மகோற்சவம்

மானிப்பாய், மார்ச். 10

கொக்குவில் மணியர் பதி அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

கொடியேற்றம் பகல் 12 மணிக்கு

மகோற்சவ கிரியைகளை உடுவில் வேதசிவாகமக்கிரியா ரத்னம். சிவ ஸ்ரீ சாம்பசிவ. சோமசபேசக் குருக்கள் நடத்தி வைப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வாழ்நாளில் நிகழ்ந்திடும் சகல
மங்கல நிகழ்வுகளை காலமெல்லாம்
பார்த்து மகிழ்ந்திட தத்ருபமாக
ஒளிப்பதிவு செய்துகொள்ள
*
வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477

உதயன்

10. 03. 1986

புதிய, பழைய T.V. கசெட்,
T.V. றெக்கோடிங்
கலர் / வெள்ளை பிலிம் படச் சுருள்கள்
*
வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477

# ஹெலிக்கொப்டர் வீழ்ந்த இடத்தில் ஆயுதப்படை முகாம்

## மூன்று பெண்களும் விடுவிப்பு

பறையனாலங்குளத்தில் ஹெலிக்கொப்டர் விழ்ந்த இடத்தில் ஆயுதப்படை முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

திருத்தப்படும் ஹெலிக்கொப்டருக்குப் பாதுகாப்பளிக்கவே இந்த ஏற்பாடு.

மார்ச் 2 ஆம் திகதி சனிக்கிழமை பறையனாலங்குளப்பகுதியில் ஹெலிக்கொப்டர் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலில் பலத்த சேதம் அடைந்தது.

அந்த ஹெலிக்கொப்டர் அப்பகுதியில் தரை இறக்கப்பட்டு திருத்தப்பட்டு வருகின்றது.

அதன் காரணமாகவே அப்பகுதியில் முகாம் ஒன்றைப் படையினர் அமைத்துள்ளனர்.

இதேவேளை விசாரணைக்காக ஞாயிறு மாலை வவுனியா பறையனாலங்குளத்தில் ஆயுதப்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்ட மூன்று மலையகத் தமிழ் இளம் பெண்கள் நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டனர்.

பறையனாலங்குளத்தில் கடந்த சில தினங்களாக நடந்து வரும் படையினரின் நடவடிக்கைகளில் ஒரு கட்டமாகவே இப்பெண்கள் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதனிடையில் அனுராதபுரம் முகாமுக்குக் கொண்டு போகப்பட்ட 9 தமிழர்கள் தச்சன்குளத்தில் உள்ள முகாமுக்குக் கொண்டுவரப்பட்டனர். வவுனியா அரச அதிபரின் முயற்சி காரணமாகவே வவுனியாவைச் சேர்ந்த அந்த 9 பேரும் கொண்டு வரப்பட்டனர்.

பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து நிவாரணம் வழங்குவது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக வவுனியா அரச அதிபர், செயலக அதிகாரிகள், சமூக சேவை அதிகாரிகள் ஆகியோர் பிரஜைகள் குழுவுடன் பறையனாலங்குளம், கண்ணாட்டி ஆகிய இடங்களுக்கு இன்று (10.3.86) செல்கின்றனர்.

## விமான நிலயத்தில் தஞ்சம் கோரும் ஆப்கானிஸ்தர்

கொழும்பு, மார்ச் 10

கட்டுநாயக்கா விமான நிலையக் கட்டடத்தில் 4 ஆப்கானிஸ்தான் பிரஜைகள் தஞ்சம்கோரியுள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களாக ஒருஆப்கன் பிரஜை கட்டுநாயக்கா விமான நிலயத்தில் தங்கியிருக்கின்ருர்.

இவருடன் மாலைதீவில் இருந்து நேற்று வந்த 3 ஆப்கன் பிரஜைகளும் சேர்ந்து கொண்டனர்.

## சிங்கள....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கருத்தை வலியுறுத்தி உள்ளார்.

தனிப்பட்ட கட்சிக் குரோதங்களை மறந்து இனப் பிரச்சினைக்கு தீர்வு காண சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றுபடவேண்டும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்ட பின்னர் இரண்டு கட்சிகளும் தங்கள் சொந்த வழியில் செல்லலாம்.

இப்படி அமைச்சர் காமினி ஜெயசூரியா கூறி இருக்கின்ருர்.

## மலையகத்தில் வீதியால் சென்ற தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர்

கொழும்பு, மார்ச் 10

வீதியால் நடந்து சென்ற தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் மீது சிப்பாய்கள் தாக்குதல்கள் நடத்தியதாகச் சொல்லப்படுகிறது.

மஸ்கெலியாவில் இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடந்ததாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸிடம் முறையிடப்பட்டது.

வேலை விட்டு தமிழ்த் தோட்டத் தொழிலாளர் பதினைந்து பேர் வரையில் வீதியால் வீடுகளுக்குச் சென்று கொண்டு இருந்தனராம்.

அச்சமயம் எதிரே இருந்து வந்த ஜீப் நிறுத்தப்பட்டது. சிப்பாய்கள் கீழே இறங்கி, துவக்கின் பின்பக்கத்தினுல் தொழிலாளர்களைத் தாக்கினராம்.

ஹட்டனிலும் இது போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக தோட்டத்தொழிலாளர் மாலை நேரங்களில் வீதிகளில் நடமாடப் பயப்படுகின்றனர்.

## கொடி தினம் இன்று

யாழ்ப்பாணம்,மார்ச் 10

கைதடி சிறுவர் இல்ல பதினேழாவது கொடி தினம் இன்று திங்கட்கிழமை கொண்டாடப்படுகிறது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும் கொடி தின விழாவை யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ துறைத்தலைவர் கலாநிதி எஸ். பவானி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

யாழ்ப்பாண சிரேஷ்ட கூட்டுறவு ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம் தொடக்கவுரை நிகழ்த்த தொழிலதிபர் திரு. க. கனகராசா கொடி விற்பனையை ஆரம்பித்து வைப்பார்.

## ஜனுதிபதி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார் என்று அறியவந்துள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சர் பலிராம் பகத்தின் நாடாளுமன்றப் பேச்சுக்கு இலங்கை அரசு கண்டன அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது. இந்திய அரசு இந்த அறிக்கைக்குப் பதிலாக அனுப்பிய கடிதம் பற்றி இலங்கை அரசு தற்சமயம்ஆராய்ந்து வருகிறது.

இலங்கைத் தூதர் திரு. பெர்னுட் திலகரத்தினு புதுடில்லி திரும்பும்போது அந்தக் கடிதத்துக்கு இலங்கையின் பதிலையும் கொண்டு செல்வார் என்று தெரிகிறது.

## இந்தியாவின் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆனுல் திரு. இராமச்சந்திரன் இன்னும் போராளிகள் அமைப்புக்களுடன் இதுபற்றி பேசவில்லை என்று தெரிகிறது.

### பதில் அறிந்தே பேச்சு

இந்தியப்பிரதமர் திரு. காந்தி, தனது தூதர் டிக்ஸிற்மூலம திரு.ஜெயவர்த்தனுவுக்கு அனுப்பிய செய்திக்கு இலங்கை அரசிடம்இருந்து கிடைக்கும் பதிலின் தன்மை, கூட்டணியின் மாற்று யோசனைகள் குறித்து இலங்கை நிலைமையில் காணப்படும் மாற்றம் ஆகியவற்றை வைத்தே, போர் நிறுத்தம் ஒன்றுக்கு உடன்படுமாறு போராளிகளின் அமைப்புக்களுடன் இந்தியஅரசு தொடர்பு கொள்ளும் என்று தெரிகிறது.

### போராளிகளின் நிபந்தனை

அப்படி ஒரு நிலை உருவானுல் அதனை ஏற்பதற்கு சில நிபந்தனைகளை விதிக்க போராளி அமைப்புக்கள் தயாராக உள்ளன.

போர் நிறுத்தம் ஒன்றுக்குப் போராளிகள் உடன்பட வேண்டுமானுல் இலங்கை அரசு பின் வரும் நிபந்தனைகளுக்கு இணங்கவேண்டும்.

1. போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க சர்வதேச கண்காணிப்புக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும்.

2. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள ஆயுதப்படை முகாம்களுக்குத் தற்போதுள்ள ஆயுதங்களைவிட, போர் நிறுத்தம் அமுலுக்கு வரும் காலத்தில் இருந்து கூடுதல் ஆயுதங்கள் அனுப்பக் கூடாது.

இந்த நிபந்தனைகளுக்குக்கட்டுப்பட்டால்தான் போராளிகள் போர் நிறுத்தத்துக்குக் கட்டுப்படுவர் என்று போராளிகளின் வட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கை அரசிடம் இருந்து சாதகமானபதில் இந்தியாவுக்குக் கிடைத்தால் மட்டுமே, மேற் கண்ட 3 அம்சங்களின் அடிப்படையில் இந்தியா நடவடிக்கை எடுக்கும் என்று கூறப்படுகிறது.

## வானில் சென்ற..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது கீழே பதிந்து வந்த ஹெலிக்கொப்டர் அவர்களைத் கலைத்துக் கலைத்துச் சுட்டது.

வானில் சென்றவர்கள் நிலத்தில் உருண்டு சூட்டுக்குத் தப்ப முயன்றனர். ஆனுல் கணேசகுமாருக்கு இடுப்பில் சூடுபட்டது அவர் அந்த இடத்திலேயே மரணமானுர்.

தொடர்ந்து அவ்விடத்தில் சுற்றிச் சுற்றி ஹெலிக்கொப்டர் சுட்டதனுல் அப்பகுதி மக்கள் மிகவும் பதற்றம் அடைந்தனர். பலர் பாதுகாப்பிடம் நாடி ஓடினர்.

தோட்டப் பகுதிகளில் வேலைசெய்து கொண்டிருந்தவர்கள் மிளகாய்க்கன்று போன்ற பயிர்களுக்குள்படுத்துத் தம்மைக் காப்பாற்றிக் கொண்டனர். சில தோட்டங்கள் முற்ருகப் பாதிப்படைந்தன. இரண்டு வீடுகள் சூட்டினுல் சேதமடைந்தன.

## தமிழர் மீதா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதி சொன்னதாவது;

"போராளிகளினுல் சிலர் கொல்லப்பட்டிருக்கலாம். ஆனுல் அரசுப் படைகள் திருப்பித் தாக்கும் போது நூற்றுக்கணக்கான தமிழ்க் குடி மக்கள் கொல்லப்பட்டு வருகின்ருர்கள்.

போராளிகளின் தாக்குதல்களைச் சாட்டாக வைத்துக் கொண்டு அரசுப் படைகள் தமிழர்களைக் கண்டபடி கைது செய்வது, விசாரணையின்றிக் கொல்வது முதலிய அட்டூழியங்களைச் செய்ய முடியாது''.

### கனடா

கனடா அரசுப் பிரதிநிதி சொன்னதாவது;

''மக்கள் நெருக்கமாக வாழும் யாழ்ப்பாணப் பகுதியில் விமானத் தாக்குதல்கள் நடைபெறுவது கவலையைத் தருகின்றது.

இரண்டு தரப்பினருக்கும் இடையே பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

இலங்கையின் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளினுல் மனித உரிமைகள் மீறப்படுவது கவலைக்குரியது.

பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண கொழும்பு முயல வேண்டும்.

பேச்சுவார்த்தை மூலம தீர்வுகாண இந்திய அரசு எடுக்கும் முயற்சி முற்றிலும் வரவேற்கத்தக்கது.

### ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியப் பிரதிநிதி சொன்னதாவது;

இலங்கையில் தமிழருக்கு எதிரான வன்செயல்கள் அதிகரித்து வருவது சர்வதேச ரீதியில் பலத்த ஏமாற்றத்தையும் கவலையையும் தருகின்றது — என்ருர்.

சர்வதேச ஜூரர் ஆணைக்குழுவின் செயலாளர் நாயகம் பேசுகையில்;

இலங்கையின் நிலைமை மிக மோசமாக உள்ளது. உள்நாட்டு யுத்தத்தின் விளிம்பில் இன்று இலங்கை உள்ளது!! என்ருர்.

## மட்டக்களப்பில் நெற் செய்கை பாதிப்பு

மட்டக்களப்பு,மார்ச்,10

மட்டக்களப்பில் தொடர்ந்து பெய்து வரும் பெருமழையினுல் பெரும்போக அறுவடை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

அறுவடை செய்யப்படாத 20 ஆயிரம் ஏக்கர் காணியில் சாகுபடி முற்ருகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இதனுல் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர் நோக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

## கனேடியத் தூதுவர்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் செயலகத்தில் அவர் சந்திப்பார்.

பிற்பகல் 3 30 மணியளவில் யாழ்ப்பாணம் வை. டபிள்யு. சி. ஏ. கட்டடத்தை திரு. கொலகொட் திறந்து வைப்பார்.

நாளை 11ந் திகதி யாழ் செயலகத்தில் காலை ஒன்பது மணியளவில் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் பெரியார்களைச் சந்தித்துஉரையாடுவார்.

அதன் பின்னர் பத்து மணியளவில் யாழ் பல்கலைக் கழக உபவேந்தர் சு வித்தியானந்தனையும், பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சகல பீட மாணவர் தலைவர்களையும் அவர் சந்திப்பார்.

நாளைகாலை பதினெரு மணிக்கு இனுவில் மகளிர் நிலயத்திற்கும் விஜயம் செய்யும் அவர், அங்கு மகளிர் கைவண்ணத்தில் உருவான கைப்பணிப் பொருள்களைப் பார்வையிடுவார்.

அதன் பின்னர் பிற்பகல் இரண்டு மணியளவில் யாழ். பிரஜைகள் இணைப்புக் குழுத் தலைவரைச் சந்தித்து கலந்துரையாடுவார்.

நாளை பிற்பகல் நான்கு மணியளவில் நாவாந்துறை சென் மேரிஸ் சிறுவர் பராமரிப்பு நிலயத்திற்கு விஜயம் செய்யும் திரு. கொலகொட் அங்கு நடைபெறும் பிரார்த்தனை வழிபாட்டில் கலந்து கொள்வார்.

தனது யாழ். விஜயத்தின் இறுதி நாளான புதன்கிழமை பத்து மணிக்கு யாழ் மாநகர சபை நியமனக்கும்படைப் பிரிவை அவர் அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரை நிகழ்த்துவார்.

நாளை மறுதினம் காலை பதினெரு மணியளவில் பொம்மைவெளி யுனிசெப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நீர் விநியோகத் திட்டத்தையும் அங்குரார்ப்பணம் செய்து வைத்த பின்னர் பிற்பகல் 4 30 மணியளவில் ... அவரது பாரியார் சகிதம் கொழும்புக்குத் திரும்பிச் செல்வார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ருமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட்,207,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 10-03-1986

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka under number QJ 60/N/86

## விளையாட்டரங்கு

9 பேர் கொண்ட அணி

### விறுவிறுப்பாக நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டி

### சென். மேரிஸ், பொற்பதிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். உதைபந்தாட்டலீக் நடத்தும் தலைவர் சுற்றுக்கிண்ணத்திற்கான 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

கோண்டாவில் குமரன் விளையாட்டு மைதானத்தில் 'நொக்கவுட்' அடிப்படையில் இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி நாவாந்துறை சென்.நிக்கலஸ் விளையாட்டுக் கழக அணியை 3 க்கு 1 என்ற கோல் அடிப்படையில் வென்றது.

இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் போட்டு மிக இறுக்கமாக விளையாடின.

இறுதி நேரத்தில் சென்.மேரிஸ் அணிஅபாரமாக ஆடி மேலும் இரு கோல்களைப் போட்டு வெற்றியைத் தனதாக்கியது.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக ஈழமுரசு பத்திரிகை ஆசிரியர் திரு. எஸ் திருச்செல்வம் கலந்து கொண்டார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மற்றெரு நொக்கவுட் போட்டியில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்தது.

நிறைந்த ரசிகர்கள் மத்தியில் ஆரம்பமான ஆட்டம் இறுதி நேரம் வரை விறுவிறுப்பாக நடைபெற்றது.

ஆட்ட நேர முடிவு வரை எந்த அணியும் கோல் போடவில்லை. அதனுல் மேலதிகமாக பத்து நிமிட நேரத்திற்கு ஆட்டம் நீடிக்கப்பட்டது.

பத்து நிமிட நேர ஆட்டம் ஆரம்பமானவுடன் கிறீன்பீல்ட் அணி ஒரு கோலைப் போட்டது. ஆனுல் பத்தாவது நிமிடத்தில் பொற்பதி அணியும் ஒருகோலைப் போட்டு கோல் எண்ணிக்கையை சமப்படுத்தியது.

பத்துநிமிட மேலதிக நேர ஆட்டத்திலும் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததால் பனல்டி உதைகளின் மூலம் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்பட்டது.

வழங்கப்பட்ட நான்கு பனல்டி உதைகளில் கிறீன்பீல்ட் அணி ஒன்றையும் பொற்பதி அணி மூன்றையும் கோலுக்குள் செலுத்தின.

இதன்மூலம் பொற்பதி அணி கிறீன்பீல்ட் அணியை 4க்கு 2 என்ற கோல் அடிப்படையில் வென்றது.

இரண்டாவதாக நடைபெற்ற இந்தப் போட்டிக்கு உதயன் பத்திரிகை ஆசிரியர் திரு. ம. வ. கானமயில்நாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

முதலாவது போட்டிக்கு எஸ். தேவராஜாவும், இரண்டாவது ஆட்டத்திற்கு எம். தேவதாஸும் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## அனுபவம் மிக்க வீரர்களை கொண்ட கொக்குவில் இந்து

— விளையாட்டுச் செய்தியாளர்:- சண். ஜோன்சன் —

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரி கிரிக்கெட் அணிகளை கிரிக்கெட் ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தும் வரிசையில் இன்று இடம் பெறுவது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி.

வடக்கு கிரிக்கெட் அணிகளுள் திறமை வாய்ந்த அணியாக கருதப்படக்கூடியது கொக்குவில் அணி.

சிறந்த பயிற்சி வசதி அளிக்கப்பட்டால் தேசிய தரத்துக்கு உயரக்கூடிய வாய்ப்புகள் நிறைய உண்டு.

வடக்கில் மற்றைய அணிகளுக்கு இல்லாத மற்றெரு சிறப்பும் இந்த அணிக்கு இருக்கிறது.

மிக நீண்ட காலம் அணியில் தொடர்ந்து விளையாடி மிகுந்த அனுபவம் பெற்ற வீரர்களை அதிகமாகக் கொண்ட அணி இதுதான்.

அணியின் திறமைச் சாதனைக்கு இதுதான் காரணம்.

வி. மதிதரன்:- அணித் தலைவர். அழகாக துடுப்பெடுத்தாடும் அணியின் ஆரம்ப வலதுகை துடுப்பாட்ட வீரர். ஐந்தாவது வருடமாக இந்த அணிக்காக விளையாடும் வலதுகை வேகப் பந்து வீச்சாளர்.

சி. துஷ்யந்தன்:- அணியின் உப தலைவர். அணியின் சிறந்த ஆரம்ப வலதுகை வேகப் பந்து வீச்சாளர். வேகமாக ஓட்டங்களைக் குவிக்கும் வலது கை துடுப்பாட்டக்காரர். நான்காம் வருடமாக இந்த அணிக்காக ஆடுகிருர்.

கு. சதீஸ்குமார்:- நின்று நிதானமாக ஆடும் சிறந்த வலதுகை துடுப்பாட்டக்காரர். வலதுகை நடுத்தர வேகப் பந்து வீச்சாளர். மூன்ரும் வருடமாக இந்த அணிக்காக ஆடும் இவர் அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவர்.

மு இராஜ்மோகன்:- இந்த அணியின் விக்கெட் காப்பாளர், திறமை வாய்ந்த வலதுகை துடுப்பாட்டக்காரர்.

து. மோகன்:- அபாரமாக ஆடும் வலதுகை துடுப்பாட்ட வீரர் அணி இவரிடம் பெரிதான சாதனைகளை எதிர்பார்த்து நிற்கிறது. அணிக்கு இரண்டாவது வருடமாக ஆடுகிருர்.

ச. கிருபானந்தன்:- இடதுகை துடுப்பாட்ட வீரர். திறமை வாய்ந்த இடதுகை வேகப் பந்து வீச்சாளர். ஐந்தாவது வருடமாக ஆடும் அனுபவம் நிறைந்த ஆட்டக்காரர்.



வி. மதிதரன்

லோ. லோகன்:- அபாரமாக ஆடும் ஆரம்ப இடதுகை துடுப்பாட்ட வீரர். வலதுகை வேகப் பந்து வீச்சாளர். இரண்டாம் வருடமாக ஆடுபவர்.

எஸ் ஜே. பேரின்பநாதன்:- லாவகமாக துடுப்பெடுத்தாடும் வலதுகை துடுப்பாட்டக்காரர். இவர் இந்த அணிக்காக ஆடுவது இது இரண்டாம் வருடம்.

அனுபவம் வாய்ந்த பழைய ஆட்டக்காரர்களை இதுவரை அறிமுகப் படுத்தினும். இனி, அணியின் புது முகங்களைக் காண்போம்.

வி. விமல்ராஜ்:- சிறப்பாக துடுப்பெடுத்தாடும் வலதுகை துடுப்பாட்ட வீரர். திறமை வாய்ந்த பந்து தடுப்பாளர்.

இ. விஸ்வநாதன்:- அணியில் வயதுகுறைந்த, கவர்ச்சிகரமாக துடுப்பெடுத்தாடும் வலதுகை ஆட்டக்காரர். வலதுகை நடுத்தர வேகப் பந்து வீச்சாளர். சிறந்த பந்து தடுப்பாளர் என்று விமர்சிக்கப்படுபவர்

எஸ். சதீஸ்குமார்:- சிறந்த வலதுகை துடுப்பாட்ட வீரர், வலதுகை சுழல் பந்து வீச்சாளர்.

த. திருத்தணிகன்:- வலதுகை துடுப்பாட்ட வீரர், வலதுகை வேகப் பந்து வீச்சாளர்.

அ. ஜெயகாந்தன்:- வலதுகை துடுப்பாட்டக்காரர், சிறப்பாக பந்து தடுப்பதில் வல்லவர்.

பி. திவாகர்:- வலதுகை துடுப்பாட்டக்காரர், வலதுகை நடுத்தர வேகப் பந்து வீச்சாளர்.

செ. சோகிரன்:- வலதுகை துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து தடுப்பாளர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் பயிற்சியாளராக திரு. கு. மகேந்திரகுமார் கடமையாற்ற பொறுப்பாசிரியர் திரு. ரி. புவனசுந்தரராஜா அணியை வழி நடத்தி வருகிருர்.

## கண்ணகி அணி சாம்பியனுனது!

### விளையாடாமலேயே சந்தர்ப்பத்தை கோட்டை விட்ட கிறுஸ்கொப்பர்ஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 10

அளவெட்டி வடக்கு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திய ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகம் சாம்பியனுனது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற இருந்த இறுதி மோதலில் பங்குபற்றுவதற்கு தெல்லிப்பளை கிறுஸ்கொப்பர்ஸ் அணி சமுகம் தராததால் கண்ணகி அணி இறுதியாட்டத்தில் விளையாடாமலேயே சாம்பியனுனது.